# திருச்சபைக் கீர்த்தனைகளில் மறுமலர்ச்சி

நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன் சங் 108 1

நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்

சங் 104 33

கர்த்தாவே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன். சங் 101 1

இசையால் வசம் ஆகா இதயமெது? இசைக்கிறவர்களுக்கு அல்லது பாடுபவர்களுக்கு மட்டுமல்லாமல் கேட்கிற அல்லது ரசிக்கிறவர்களுக்கும் இன்பம் தருவது இசை.

இசை என்ற சொல்லைக் கேட்கும் போதே நம் காதில் ஏதோ ஒரு ஓசை ரீங்காரம் செய்கிறதல்லவா? உலகிலேயே வளர்ச்சியுற்ற இசை என்ற வரிசையில் பார்த்தால் பாரத இசையினையே முதன் முதலாக வைத்துச் சொல்ல வேண்டும். நாம் இந்தியர் என்பதால் இதைச் சொல்லவில்லை.

பாவம் (Expression) ராகம், தாளம் மூன்றும் இணைந்து தான் பாரதம் உருவாயிற்று என்று Rev. Honest Chinnaiah அவர்கள் கூறுவதுண்டு. அத்தகு இசையில் அமைக்கப்பட்ட திருச்சபைக் கீர்த்தனைகளை உருவாக்கி நம் முன்னோர்கள் சாதனை படைத்துள்ளனர். அர்த்தத்துடனும் அர்ப்பணிப்புடனும் கீர்த்தனைகள் பலவற்றை வடிவமைத்துள்ளனர்.

**கீர்த்தனையும் அதன் சிறப்பியல்புகளும்**

உலகத்தை படைத்த இறைவனின் கீர்த்தியை பாடுவதற்குரிய பாடலே கீர்த்தனை எனப்படுவது. இது பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்ற பிரிவிலோ, அல்லது கண்ணிகள் என்ற வகையிலோ அமைந்திருக்கும்.

கீர்த்தனைகளில் சொற்சுவை, பொருட்சுவை, பக்திச்சுவை போன்ற அனைத்துச் சுவைகளும் ததும்பி காணப்படுகிறது.

திருச்சபை வழிபாட்டிலும் சரி, நமது விழாக்களிலும் சரி, மற்றெங்காகிலும் சரி, கீர்த்தனை முக்கிய இடம் பெறுகிறது. ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனின் வாழ்வில் துன்பத்திலும் இன்பத்திலும் பாடலொலி கேட்கும் அல்லது பிறக்கும். இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் பரிசுத்த கூட்டத்தோடு சேர்ந்து பாடுவதே நாம் பெறும் பெரும் பாக்கியம். அதற்கென்று இப்போதே நம்மை தயாராக்கிக் கொள்வோம்.

கணினி உலகம் அதிவேகமாக செயல்படுவது போல் பாடல்களிலும் ‘அதிவேக பாடல்’ என்று புதிது புதிதாக, வேக வேகமாக வந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு வேகமாக வருகிறதோ அதே வேகத்தில் அழிந்தும் கொண்டிருக்கிறது.

ஆனால் நம் ஆன்மாவைத் தொடும் சக்தி கொண்ட கீர்த்தனைகள் அழியாது, நேற்றும் இன்றும் நிலைநிற்கிறது.

**கீர்த்தனைகளின் இன்றைய நிலை**

கீர்த்தனை பிதாமகன் வேதநாயகம் சாஸ்திரியார், அருள்திரு.ஞா.சாமுவேல் ஐயர், ஜான் பால்மர், கவியரசர் H.A. கிருட்டிணபிள்ளை, Dr. சவரிராயன் ஏசுதாசன், சந்தியாகு ஐயர், தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், மரியான் உபதேசியார், ம.வேதமாணிக்கம், வே.மாசிலாமணி, த.யோசேப்பு போன்றவர்களோடு இன்னும் எத்தனையோ பெரியோர்கள் இயற்றிய கருத்தாழ மிக்க கீர்த்தனைகள் நூற்றுக்கணக்காக உள்ளன.

இத்தனை கீர்த்தனைகள் இருந்தும், நம்மால் பாடப்படும் கீர்த்தனைகள் மிக சொற்பமே. இதை எண்ணும் போது நாம் வெட்கப்படத்தான் வேண்டும். அமுதினும் இனிய செந்தமிழ்க் கீர்த்தனைகளை நுணிநாக்கில் வைத்தே பிழை பிழையாய் உச்சரிப்பது நாகரிகம் என்றெண்ணி, நமது திருச்சபைகளில் பாடுவதைக் கேட்கும் போது வேதனை அளிக்கிறதாயிருக்கிறது.

**கீர்த்தனைகள் வளர்ச்சியில் திருச்சபை**

கீர்த்தனைகளை அதற்கேற்ற முறையில் அமைந்த இராகம், தாளங்களில் பாடினால் சிறப்பாயிருக்கும். அதைக் கேட்க பிறமதத்தினர் நம் திருச்சபைகளை ஓடிவருவதோடு இரட்சகர் இயேசுவை விசுவாசித்து, அவர் பிள்ளைகளாக மாறுவர் என்பதில் ஐயமில்லை.

அழிந்து வரும் அவல நிலையை நீக்கி, மறக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் வரும் நமது கீர்த்தனைகளை உயிர்ப்பிக்க, ஒவ்வொராண்டும் கோவை மாநகரில் கீர்த்தனைப் பெருவிழா நிகழ்த்தி வருவது பாராட்டுதலுக்கும், வாழ்த்துதலுக்கும் உரியது.

வாழ்க இயேசு நாமம் ! வளர்க கீர்த்தனை உலகு !!

Beulah Shanthi Vellus, B.A., B.MUS.,
Bentinck Hr. Sec. School for Girls,
Chennai – 600007.

Dr.T.Thangaraj B.Sc., (Ag) M.Sc., (Ag), Ph.D
Former Dean,
Tamilnadu Agricultural University,
Coimbatore